# பெருமைமிகு புதுச்சேரியை உருவாக்குவோம்

- ந. ரங்கசாமி,
முதலமைச்சர்

எனது அன்பிற்கினிய புதுச்சேரி மாநில மக்கள் அனைவருக்கும் எனது உளங்கனிந்த குடியரசு தின நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

உலக அளவில் நமது நாட்டின் குடியாட்சி அமைப்பு உன்னதமான ஒன்றாக உள்ளது. நாம் இத்தகைய உன்னதமான இடத்தை அடைய அரும்பாடுபட்ட விடுதலை வீரர்களின் தியாகத்தையும் அவர்களது உள்ளத்தில் ஒளிர்ந்த இலட்சியங்களையும் நினைவுகூர்ந்து நன்றி கூறுவது நமது கடமையாகும்.

மக்கள் அனைவரும் வளமான வாழ்வை அனைத்து நிலைகளிலும் பெறவேண்டும், அவர்களின் சமூக நலனைப் பாதுகாக்க வேண்டும் என்பதைக் கடமையாகக் கொண்டுள்ள எமது அரசு, நேர்மையான வெளிப்படையான ஆட்சியை ஒரு சிறந்த நிர்வாகத்தை குடியாட்சித் தத்துவத்தின் அடிப்படையில் வழங்கி வருகிறது.

30.12.2011 அன்று வீசிய தானே புயலால் நமது புதுச்சேரி மாநிலம் முற்றிலுமாக தடம் புரண்டு போனது. தானே புயல் எச்சரிக்கையைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கையால் உயிர்ச்சேதங்கள் பெருமளவில் தவிர்க்கப்பட்டது. காற்றின் தாக்கம் அதிகமாக இருந்ததால், மரங்கள், விவசாய நிலங்கள், மீன்பிடி படகுகள், கால்நடைகள், விலங்கினங்கள், குடிசை மற்றும் ஓட்டு வீடுகள் பெருமளவு சேதமடைந்தன. மின்சாரமும் போக்குவரத்தும் முற்றிலும் தடைபட்டது.

மின் துறை, பொதுப்பணித் துறை, உள்ளாட்சித் துறை உள்ளிட்ட இதர துறைகளுடனும் பொதுமக்களுடனும் இணைந்து போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட நிவாரணப் பணிகளால், பீனிக்ஸ் பறவை போல் நாம் மீண்டு எழுந்திருக்கிறோம். மத்திய அரசு இடைக்கால நிவாரணமாக ரூ.125 கோடியை நமக்கு அளித்துள்ளது. மாநிலத்தை இயல்பு நிலைக்குக் கொண்டுவர இன்னும் கூடுதல் நிதி ஆதாரம் தேவை. என்றாலும், இருப்பதைக் கொண்டு நிலைமையை ஒரளவுக்குக் கட்டுக்குள் கொண்டுவர, தானே புயலால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு ரூ.32 கோடியும், விவசாயிகளுக்கு ரூ.44 கோடியும், கால்நடைகளுக்காக ரூ.2.6 கோடியும் வீடுகளுக்கு ரூ.80 கோடியும் நிவாரணத் தொகை உடனடியாக வழங்க எமது அரசு ஏற்பாடு செய்துள்ளது.

நமது புதுச்சேரி மாநிலம் அமைதியும் அழகும் நிரம்பிய பசுமையான மாநிலம். இந்த பசுமையான மாநிலத்தை தானே புயல் புரட்டிப்போட்டுள்ளது. நல்ல நிலையில் இருந்த பயிர்களான நெல், கரும்பு, வாழை, தென்னை மற்றும் இதர பயிகள் சுமார் 17,012 ஹெக்டர் அளவிற்கு தானே புயலால் பெருத்த சேதத்திற்கு உள்ளாகியுள்ளது. பாதிப்படைந்த விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்க வேளாண் துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், சுமார் 2.50 இலட்சம் மரக்கன்றுகளை நட்டு மீண்டும் பசுமையான புதுச்சேரியை உருவாக்க அரசு நடவடிக்கை எடுத்துவருகிறது. பசுமைக் காடுகளையும், பண்ணைக் காடுகளையும் உருவாக்கவும் அரசு முயற்ச்சிகளை மேற்கொண்டுள்ளது.

வேளாண்மை முதன்மையான தொழிலாக விளங்குவதால் எனது அரசு வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த துறைகளின் பங்களிப்பை அதிகரிக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. விவசாயத்தை நவீன மயமாக்குதல், பாசன வசதியை அதிகரித்தல், விவசாய உற்பத்தியைப் பெருக்குதல், விவசாய விளை பொருட்களுக்கு நல்ல விலை கிடைக்க விற்பனைக் கூடங்களில் ஏலக்கூடம், விதைக்கிடங்கு மற்றும் கிராமப்புற குடோன் வசதி போன்றவற்றில் அரசு கவனம் செலுத்தி வருகிறது.

வேளாண்மை மற்றும் உப பிரிவுகளான தோட்டக்கலை, மீன்வளம், வனம், கால்நடை பராமரிப்பு, பால் பண்ணை, கூட்டுறவு போன்றவற்றில் புதிய சீர்திருத்த விரிவாக்கங்களை அமல் செய்வதன்மூலம் விவசாயிகளுக்கு பல்வேறு உதவிகளைப் புரிய அரசு உறுதியாக உள்ளது.

கல்வி, ஏழ்மையானவர்களை வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்வதில் முக்கியமான காரணியாக விளங்குவதால், தொடர்ந்து சீரான மற்றும் தரமான மனித ஆற்றலைப் பெறுவதற்கு உயர்கல்வி நிறுவனங்களில் அதிக முதலீடு மற்றும் பாடத்திட்டங்களில் சீரமைப்பு செய்வது அவசியமான ஒன்றாக உள்ளது. தென் மாநிலங்களில் நமது புதுச்சேரி ஒரு அறிவு மையமாகத் திகழ்வதற்கான வாய்ப்பை உள்ளடக்கியதாக உள்ளது. மேலும், வரும் 12ஆவது ஐந்தாண்டு காலத்தில் (2012-2017) உயர்கல்வித் துறையில் புதுச்சேரியின் பங்கு பெருமளவில் உயர்ந்து காணப்படும் வாய்ப்புகளும் உள்ளன. எனவே, இளைய சமுதாயத்தினர் தங்களது திறமைக்கேற்ப வாழ்க்கையைத் தேர்ந்தெடுக்க உறுதியளிக்கும் உயர்கல்வியை வழங்க அரசு உத்தேசித்துள்ளது. நமது மாநிலத்தில் உயர்கல்வியானது ஆற்றல் பொதிந்ததாகவும் எதிர்காலத்திற்கான

நம்பிக்கை அளிப்பதாகவும் திகழ்வதை மகிழ்ச்சியோடு இத்தருணத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

தேசிய அளவில் மருத்துவச் சேவையில் நாம் தொடர்ந்து முதலிடத்தில் இருக்கிறோம். தொடர்ச்சியான பேறுகால பரிசோதனை, முன்பேறுகால, பின்பேறுகால கவனிப்புகள், இணை ஊட்டச் சத்து உணவு போன்ற திட்டங்களை அரசு சிறப்புடன் செயல்படுத்தி வருகிறது. 1.5 கி.மீட்டருக்குள் அனைவருக்கும் தரமான மருத்துவச் சேவையை அரசு அளித்து வருகிறது. மேலும், 108 ஆம்புலன்ஸ் சேவையையும் அரசு, 19.12.2011 முதல் புதுச்சேரி பகுதியிலும் வழங்கி வருகிறது.

துரிதமான வளர்ச்சி அடைவதற்கு நல்ல தரமான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவது அவசியம். அதனடிப்படையில், நகரப் பகுதிகள் மட்டுமல்லாது கிராமப் பகுதிகளும் சிறந்த அடிப்படை கட்டமைப்புகளைப் பெறவேண்டும் என்பதே எனது அரசின் நோக்கம். சுத்தமான குடிநீரும் தட்டுபாடற்ற மின்சாரமும் மாநிலத்தின் வளர்ச்சிக்கு அவசியமானவைகளாகும். புதுச்சேரியில் குடிநீர் திட்டத்தை மேம்படுத்தும் வகையில், ரூ.36.19 கோடி செலவில் புதுச்சேரி நகர குடிநீர் விநியோக அமைப்புத் திட்டம் மூன்று பிரிவுகளாக புனரமைக்கப்பட உள்ளது. மேலும், ரூ.47.47 கோடி செலவில் புதுச்சேரி ஊசுடு ஏரியின் அதிகப்படியான நீரை, நகரக் குடிநீர் விநியோகத்திற்கான குடிநீர் ஆதாரம் மேம்படுத்தும் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட உள்ளது. அதுபோல், ரூ.10 கோடி செலவில் காலாப்பட்டில் கடல்நீர் சுத்திகரிப்பு அமைப்பு நிர்மாணிக்கப்பட உள்ளது.

ஏழைகள் மற்றும் அடித்தட்டு மக்களுக்குப் பயனளிக்கும் வகையில் பல்வேறு புதிய திட்டங்களைச் செயல்படுத்துவதில் எமது அரசு எப்போதும் முனைப்பு காட்டி வருகிறது. ஊனமுற்றோர், நெசவாளர்கள், மீனவர்கள், குழந்தைகள், மகளீர், ஆதிதிராவிட மக்கள் உள்ளிட்ட அனைத்து சமுதாயத்தினரும் பயன்பெறும் வகையில் நலத்திட்டங்களை உருவாக்கி செயல்படுத்தி வருகிறோம். மாற்றுத் திறனாளிகளுக்கான நிதியுதவித் திட்டத்தின்கீழ் 20,952 மாற்றுத்திறனாளிகள் உயர்த்தப்பட்ட நிதியுதவியைப் பெற்று பயனடைந்துள்ளனர். முதியோர் மற்றும் விதவைகளுக்கான ஓய்வூதியத் தொகை ரூ.750லிருந்து ரூ.1000 ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம், சுமார் 1.90 இலட்சம் நபர்கள் பயனடைந்துள்ளனர். அதுபோல், அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் 2,52,000 குடும்ப அட்டை தாரர்களுக்கு இலவச வேட்டி, சேலை இந்த அரசின் மூலம் வாங்கப்பட்டுள்ளது.

புதுச்சேரியில் அனைவருக்கும் உணவு பாதுகாப்பை உறுதிசெய்யும் நோக்கில் அனைவருக்குமான பொதுவிநியோகத் திட்டத்தின்கீழ் அந்தியோதயா அன்ன யோஜனா திட்ட பயனாளிகளுக்கு 35 கிலோ அரிசி, சிவப்பு அட்டைதாரர்களுக்கு 25 கிலோ அரிசி மற்றும் அனைத்து மஞ்சள் அட்டைதாரர்களுக்கு 15 கிலோ அரிசி மாதந்தோறும் இலவசமாக வழங்கப்படுகிறது. பொதுமக்களின் விருப்பத்திற்கேற்ப ஒற்றை அவியல் வெள்ளை அரிசி வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆதிதிராவிட மக்கள், சமூக பொருளாதார மற்றும் கல்வி நிலைகளில் மேம்பாடு அடைய பல்வேறு நலத்திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக, ஆதிதிராவிட மக்கள் இலவசமாக பெற்ற மனையிலோ அல்லது தமக்குச் சொந்தமான இடத்திலோ வீடு கட்டிக்கொள்ள மானியம் வழங்கப்படுகிறது. இந்த மானியத் தொகையினை ரூ.2 இலட்சத்திலிருந்து ரூ.4 இலட்சமாக உயர்த்த உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆதிதிராவிட மக்களில் வீடற்றவர்கள் குறித்த கணக்கெடுப்பு முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. விரைவில் அவர்களுக்கு இலவச மனைப்பட்ட வழங்கவும் அரசு உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது.

புதுச்சேரி மாநிலத்தில் சுற்றுலாத் தொழில் ஒரு முதன்மையானத் தொழிலாக வளர்ந்து வருகிறது. இதன்மூலம், நாட்டின் குறிப்பிடத்தக்க சுற்றுலாத் தளங்களில் ஒன்றாக புதுவை விளங்குகிறது. சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் தொழில் மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கிறது. இதனைக் கருத்தில் கொண்டு, எமது அரசு சுற்றுலாத்தள மேம்பாட்டிற்காக முதலீட்டாளர்களுக்கு பல்வேறு உதவிகளை வழங்கி வருகிறது. மேலும் 12ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏறத்தாழ ரூ.750 கோடி அளவிற்கு உள்கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம், உள்நாடு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளின் வருகை அதிகரித்து அதன்மூலம் வேலைவாய்ப்பு மற்றும் ஏனைய வளர்ச்சிகளை நமது மாநிலம் பெறும் என்பதை இங்கு குறிப்பிட்டு கூற விரும்புகிறேன்.

நமது அமைப்பு, நமது தொன்மையான பாரம்பரிய மரபுகளுடனும் கலாச்சாரத்துடனும் இணைந்து, இசைந்து வந்துள்ளது. நம்மை வழிநடத்தும் "வேற்றுமையில் ஒற்றுமை" என்கிற உயர்ந்த எண்ணத்தை நமது சுதந்திரப் போராட்டத்தின்போது நாம் பயன்படுத்தினோம். நமது பாரதத்தின் எதிர்காலத்தை நிர்மாணிக்கும்போதும் அதே பண்பை ஒற்றுமையுடன் நாம் பயன்படுத்த

வேண்டும். நமது குடியரசு, நமது சாதனை. அதை நாம் கண்ணிமைபோல் காத்து, மேலும் வலுவானதாக, உறுதியானதாக ஆக்க இத்தருணத்தில் நாம் உறுதி பூணவேண்டும்.

நமது அரசு பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி, ஒரு புதிய பாதையில் நாம் அடியெடுத்து வைக்கும் வேளையில், தானே புயல் நமது முன்னேற்றத்தைச் சற்று தள்ளி வைத்திருக்கிறது. தடைக்கற்களை படிக்கற்களாக்கி முன்னேற்றத்தை நோக்கி மாநிலத்தை வளர்ச்சிப் பாதையில் கொண்டுசெல்ல அரசு மேற்கொள்ளும் அனைத்து நடவடிக்கைகளுக்கும், திட்டங்களுக்கும் தங்களது நல்லாதரவை வழக்கம்போல் தொடர்ந்து நல்கவேண்டும் என்று கேட்டு, அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த குடியரசு தின நல்வாழ்த்துக்களை மீண்டும் ஒருமுறை தெரிவித்துக்கொள்கிறேன்.

. . .